ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

63 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## முயற்சியாண்மைக் கற்கை I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** முயற்சியாளர் ஒருவர் சுய கட்டுப்பாட்டுடன் செயற்படுதலானது
(1) தூர நோக்கு ஆகும். (2) நெகிழ்வுத்தன்மை ஆகும்.
(3) நிச்சயமற்ற தன்மை ஆகும். (4) சுயாதீனம் ஆகும்.

**2.** எந்தவொரு நிறுவனத்துக்குமான ஒரு பொதுவான குணாம்சம்
(1) நோக்கமொன்றைக் கொண்டிருத்தல் (2) இலாபம் உழைத்தல்
(3) முகாமையாளர்களைக் கொண்டிருத்தல் (4) பௌதிகரீதியான இட அமைப்பைக் கொண்டிருத்தல்

**3.** கமல் என்பவர் இறக்குமதியாளர் ஒருவரிடமிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதுடன் வாடிக்கையாளர்களுக்கு இலாபத்துடன் விற்பனை செய்கின்றார். சுரங்கன் என்பவரும் தனது சொந்த உற்பத்திப்பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு இலாபத்துடன் விற்பனை செய்கின்றார்.
மேலே தரப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பின்வருவனவற்றுள் மிகவும் சரியான கூற்று யாது ?
(1) கமல் ஒரு முயற்சியாளராகக் காணப்படும் அதேவேளை சுரங்கன் ஒரு முயற்சியாளராகக் காணப்படவில்லை.
(2) சுரங்கன் ஒரு முயற்சியாளராகக் காணப்படும் அதேவேளை கமல் ஒரு வணிகராகக் காணப்படுகின்றார்.
(3) இருவருமே முயற்சியாளர்களாகக் காணப்படுகின்றனர்.
(4) இருவருமே சமூக முயற்சியாளர்களாகக் காணப்படுகின்றனர்.

**4.** முயற்சியாண்மை தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - வணிகமொன்றை ஆரம்பித்தல் என்பது எந்தவொரு நபருக்கும் ஓர் இலகுவான பணியாகும்.
B - முயற்சியாளர்கள் பிறக்கின்றார்கள் என்பதுடன் அவர்கள் உருவாக்கப்படுவதில்லை.
C - முயற்சியாண்மைக்கு வயது என்பது ஒரு வரையறுக்கும் காரணியல்ல.
இவற்றுள் முயற்சியாண்மை தொடர்பில் மிகச் சரியான கூற்றுகள் யாவை ?
(1) A யும் B யும் மட்டும் (2) A யும் C யும் மட்டும்
(3) B யும் C யும் மட்டும் (4) A, B, C ஆகிய எல்லாம்

**5.** வணிக உலகிலுள்ள போட்டியானது எப்பொழுதும் மாற்றத்துக்குள்ளாகின்றது. இதனை,
(1) நிச்சயமற்ற தன்மையாக இனங்காணலாம். (2) நிச்சயமுள்ள தன்மையாக இனங்காணலாம்.
(3) சவாலாக இனங்காணலாம். (4) வணிகச் சூழலாக இனங்காணலாம்.

**6.** நிறுவனமொன்றின் உள்வாரி மற்றும் வெளிவாரிக் குழுக்களுடன் சாதகமான விதங்களில் எண்ணங்களைப் பரிமாற்றிக் கொள்ளும் திறனை,
(1) தொழினுட்பத் திறனாக இனங்காணலாம். (2) மானிடத் திறனாக இனங்காணலாம்.
(3) எண்ணக்கருவாக்கத் திறனாக இனங்காணலாம். (4) பகுப்பாய்வுத் திறனாக இனங்காணலாம்.

**7.** நுகர்வோர் தமக்குத் தேவையான பொருள்களைத் தாமே தெரிவுசெய்து கொள்ளும் முறை தற்போது மிகவும் பிரசித்தமான விற்பனை முறையொன்றாகக் காணப்படுகின்றது. இதனை,
(1) புதிய கண்டுபிடிப்பாக இனங்காணலாம். (2) ஒரு விஸ்தரித்தலாக இனங்காணலாம்.
(3) ஒரு போலியாக இனங்காணலாம். (4) ஓர் இணைப்பாக இனங்காணலாம்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**8.** முயற்சியாளரின் சில குணாம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - சுயநம்பிக்கையும் அர்ப்பணிப்பும்
B - ஆக்கத்திறனும் புத்தாக்கமும்
C - சகல வணிக வாய்ப்புக்களையும் பயன்படுத்துதல்
D - வணிகத்தில் தனது சொந்த மூலதனத்தையும் கடன் மூலதனத்தையும் ஈடுபடுத்துதல்

மேலே தரப்பட்டவற்றுள் முயற்சியாளர் ஒருவரின் வெற்றிக்கு **தொடர்பில்லாத** குணாம்சங்கள் எவை ?

(1) A யும் C யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

**9.** ஆக்கத்திறனை முன்னேற்றுவதற்கு எடுக்கக்கூடிய ஒரு நடவடிக்கை

(1) தோல்விகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.
(2) பிரச்சினைகளைக் கவனத்திற் கொள்ளாமல் விடுதல் ஆகும்.
(3) விதிகள் மற்றும் மரபுகளுக்கமைய செயற்படுதல் ஆகும்.
(4) பல்வகைப்படுத்தலைப் புறக்கணித்தல் ஆகும்.

**10.** முயற்சியாண்மைசார் குணாம்சங்களை உள்ளடக்கியுள்ள தொகுதி எது ?

(1) நன்நம்பிக்கை, தலைமைத்துவம், விடாமுயற்சி
(2) இடரைக் கொண்டிருத்தல், சந்தைப்படுத்தல், ஆக்கத்திறன்
(3) தூரநோக்கு, நெகிழ்வுத்தன்மை, ஊக்குவித்தல்
(4) தொடர்பாடல், சந்தைப்படுத்தல், நன்நம்பிக்கை

**11.** ஆக்கத்திறனின் விளைவு,

(1) இலாபத்தை உச்சப்படுத்தல் (2) சந்தை பாதுகாக்கப்படல்
(3) புத்துருவாக்கம் (4) வணிக இடர்கள் குறைதல்

**12.** வீடுகளை நிர்மாணிக்கும் வணிகமொன்றை பிறையாளன் நடாத்துகின்றார். இவ்வணிகத்தினூடாக இவர் நிறைவேற்றுவது,

(1) தேவை ஆகும். (2) விருப்பம் ஆகும்.
(3) கேள்வி ஆகும். (4) சமூகப் பொறுப்பு ஆகும்.

**13.** முயற்சியாளருக்கும் வணிகருக்கும் இடையிலான ஒற்றுமை **அல்லாதது**

(1) பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுதல்
(2) கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல்
(3) நீண்டகால இலக்குகளை உருவாக்கிக் கொள்ளல்
(4) நிலைத்திருத்தலை நோக்கிய அக்கறை

**14.** மின் சக்தியினால் இயங்கும் மோட்டார் வாகனமொன்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துதலை,

(1) தற்போதைய உற்பத்திப்பொருளொன்றை தற்போதைய சந்தைக்கு முன்வைத்தலாகக் கருதலாம்.
(2) தற்போதைய உற்பத்திப்பொருளொன்றை புதிய சந்தைக்கு முன்வைத்தலாகக் கருதலாம்.
(3) புதிய உற்பத்திப்பொருளொன்றை தற்போதைய சந்தைக்கு முன்வைத்தலாகக் கருதலாம்.
(4) புதிய உற்பத்திப்பொருளொன்றை புதிய சந்தைக்கு முன்வைத்தலாகக் கருதலாம்.

**15.** முயற்சியாளர்களுக்காக ஒரு புதிய கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தலை,

(1) ஒரு வரையறுத்த காரணியாக இனங்காணலாம்.
(2) ஒரு சவாலாக இனங்காணலாம்.
(3) ஒரு வாய்ப்பாக இனங்காணலாம்.
(4) ஒரு போட்டி அனுகூலமாக இனங்காணலாம்.

**16.** முழு வணிகத்துக்குமான திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான மிகவும் முக்கியமான திறன்

(1) எண்ணக்கருவாக்கத் திறனாகும். (2) மானிடத் திறனாகும்.
(3) தொழினுட்பத் திறனாகும். (4) ஆலோசனை கோரும் திறனாகும்.

**17.** ஆக்க உரிமை என்பது,

(1) புதிய கண்டுபிடிப்புக்காக வழங்கப்படும் ஒரு சான்றிதழ் ஆகும்.
(2) வணிகத்திற்கான பதிவை சான்றுப்படுத்தி வழங்கப்படும் ஒரு சான்றிதழாகும்.
(3) வணிகச் செயற்பாட்டைத் தொடங்குவதற்கு வழங்கப்படும் ஓர் அனுமதிப்பத்திரம் ஆகும்.
(4) வணிகத்திற்கான சட்ட அங்கீகாரத்தைச் சான்றுப்படுத்துவதற்காக வழங்கப்படும் ஒரு சான்றிதழாகும்.

**18.** பயனுறுதியான வணிக எண்ணம் ஒன்றின் குணாம்சமாவது

(1) தொழிற்படு மூலதனத்திற்கான கஸ்டங்களைக் குறைத்தல்
(2) மாற்றமுறும் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுதல்
(3) வணிகத்துக்கான முதலீட்டாளர்களைக் கவர்தல்
(4) வணிக முகாமைத்துவ நடவடிக்கைகளைச் சுமுகமாகப் பேணுதல்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

19. வணிக நிறுவனமொன்றின் பொருளாதாரப் பொறுப்புடைமை
   (1) வளங்களின் பயனுறுதியான பயன்பாடு
   (2) நுகர்வோர் சட்டங்களையும் பிரமாணங்களையும் பாதுகாத்தல்
   (3) சமூக செல்வங்களை உயர்த்துதல்
   (4) போட்டியை எதிர்கொள்ளல்

20. சூழல்சார் பகுப்பாய்வினால் கிடைக்கும் அனுகூலம் முயற்சியாளருக்கு
   (1) வணிகத்திற்குப் புதிய வாடிக்கையாளர்களைக் கவர்ந்து கொள்ளலாகும்.
   (2) வணிக முகாமைத்துவ நடவடிக்கைகளை சீரான முறையில் மேற்கொள்ள முடியுமாயிருத்தலாகும்.
   (3) நிறுவனத்துக்கு திறமையான ஊழியர்களைக் கவர்ந்து கொள்ளலாகும்.
   (4) வணிகத்துக்கான திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் தீர்மானிக்க முடியுமாயிருத்தலாகும்.

21. முயற்சியாளர் எப்பொழுதும் தொழிற்பட வேண்டியது,
   (1) வணிக நோக்கங்களை மட்டும் அடைவதற்காகவாகும்.
   (2) சமூக நோக்கங்களை மட்டும் அடைவதற்காகவாகும்.
   (3) போட்டிசார் அனுகூலங்களை உயர்த்துவதற்காகவாகும்.
   (4) வணிக மற்றும் சமூக நோக்கங்களை அடைவதற்காகவாகும்.

22. தற்போதைய வணிகச் சூழலில் காணத்தக்க ஒரு குணாம்சம்
   (1) சூழல்சார் காரணிகளின் பலமான உறுதித்தன்மை
   (2) கடுமையான போட்டி நிலைமை
   (3) தனிப்பட்டவர்கள் தமது தேவைகள் மற்றும் விருப்பங்களைக் குறைந்தமட்டத்தில் நிறைவேற்ற முயற்சித்தல்
   (4) மனித விருப்பங்களை நிறைவேற்றுவதற்குரிய பொருள்களும் சேவைகளும் வரையறைக்குட்பட்டனவாய் இருத்தல்

23. பொருள்கள், சேவைகள் தொடர்பாக எதனை, எவ்வாறு, எவ்வளவு உற்பத்திசெய்தல் வேண்டும் என்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுவது
   (1) முயற்சியாளர்களால் ஆகும்.
   (2) கொள்கை வகுப்பாளர்களால் ஆகும்.
   (3) உற்பத்தியாளர்களால் ஆகும்.
   (4) மத்திய அரசாங்கத்தால் ஆகும்.

24. முயற்சியாளர்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படுவது மனித
   (1) தேவைகள் ஆகும்.
   (2) விருப்பங்கள் ஆகும்.
   (3) நோக்கங்கள் ஆகும்.
   (4) எதிர்பார்க்கைகள் ஆகும்.

25. முயற்சியாண்மைசார் கலாசாரத்தை உருவாக்குவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலம்
   (1) பணவீக்கத்தைக் குறைக்க முடியும்.
   (2) சமூகச் செலவுகளைக் குறைக்க முடியும்.
   (3) பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்த முடியும்.
   (4) ஏற்றுமதிகளை வளர்ச்சியடையச் செய்ய முடியும்.

26. மரபுகளுக்கப்பால் சென்று வணிகத்தை நடாத்த விருப்பமில்லாதிருத்தலின் காரணமாக,
   (1) புத்துருவாக்கங்கள் வரையறுக்கப்படும்.
   (2) வணிகத்தின் நிலையான தன்மை உறுதிப்படுத்தப்படும்.
   (3) இலாபத்தில் தாக்கம் செலுத்தப்படமாட்டாது.
   (4) உற்பத்திப்பொருள்களின் தரம் உறுதிப்படுத்தப்படும்.

27. பங்குடைமை வணிகத்தின் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுவது,
   (1) பிரதேச செயலாளரால் ஆகும்.
   (2) மாகாணச் செயலாளரால் ஆகும்.
   (3) கிராம அலுவலரால் ஆகும்.
   (4) கம்பனிப் பதிவாளரால் ஆகும்.

28. வரையறுத்த கம்பனி ஒன்றின் இலக்குகள், பங்குதாரரது கடப்பாடுகள் மற்றும் உரிமைகளை உள்ளடக்கிய ஆவணம்
   (1) அகவிதியாகும்.
   (2) வியாபாரச் சான்றிதழ் ஆகும்.
   (3) கூட்டிணைப்புச் சான்றிதழ் ஆகும்.
   (4) வணிகப் பதிவுச் சான்றிதழ் ஆகும்.

29. முயற்சியாளர் ஒருவரால் உற்பத்தித் திட்டத்தைத் தயாரிப்பதன் அடிப்படை நோக்கம்
   (1) விற்பனைக் கிரயத்தைக் கணிப்பிடுதல்
   (2) உற்பத்திப்பொருளின் விலையைக் கணிப்பிடுதல்
   (3) உற்பத்தியின் இலாப எல்லையைத் தீர்மானித்தல்
   (4) அலகுக் கிரயத்தைக் கணிப்பிடுதல்

30. அலுவலக உபகரணங்களது பெறுமானத்தேய்வானது,
   (1) உற்பத்திக் கிரயத்துக்குரிய செலவாகும்.
   (2) சந்தைப்படுத்தல் கிரயத்துக்குரிய செலவாகும்.
   (3) நிதிக் கிரயத்துக்குரிய செலவாகும்.
   (4) நிர்வாகக் கிரயத்துக்குரிய செலவாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**31.** உற்பத்திச் செயன்முறைக்காகப் பயன்படுத்தப்படும் கட்டடத்தின் வாடகையானது,
(1) உற்பத்தித் திட்டத்தின் ஓர் உருப்படியாகக் கருதப்பட முடியும்.
(2) சந்தைப்படுத்தல் திட்டத்தின் ஓர் உருப்படியாகக் கருதப்பட முடியும்.
(3) நிதித் திட்டத்தின் ஓர் உருப்படியாகக் கருதப்பட முடியும்.
(4) முகாமைத்துவத் திட்டத்தின் ஓர் உருப்படியாகக் கருதப்பட முடியும்.

**32.** சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களைத் தீர்மானிப்பதற்காகக் கருத்திற் கொள்ள வேண்டியது
(1) சந்தைப் பகுப்பாய்வையாகும். (2) போட்டியாளர் பகுப்பாய்வையாகும்.
(3) விலை பற்றிய பகுப்பாய்வையாகும். (4) உற்பத்திப் பகுப்பாய்வையாகும்.

**33.** வணிகத்தினால் அதன் உடைமையாளர்களின் முதலீட்டுக்கு உச்சளவான நலன்களை வழங்க வேண்டும். இது
(1) முகாமையாளர்களின் கடமையாகும்.
(2) சமூகப் பொறுப்பு தொடர்பான நவீன எண்ணமாகும்.
(3) சமூகப் பொறுப்பு தொடர்பான மரபுரீதியான எண்ணமாகும்.
(4) வணிக ஒழுக்கத்துடன் தொடர்புடைய ஒரு பொறுப்பாகும்.

**34.** அரவிந்தன் என்பவர் வணிகமொன்றின் உடைமையாளரும் பிரதம நிறைவேற்று அலுவலருமாவார். இவர் தனது வணிகத்துக்கு தாக்கம் செலுத்தக்கூடிய கூட்டுரு திட்டத்தைத் தயாரித்தார். இப்பணி உரித்தாவது,
(1) ஒரு தலைவரின் வகிபாகத்துக்காகும்.
(2) ஒரு முகாமையாளரின் வகிபாகத்துக்காகும்.
(3) ஒரு உடைமையாளரின் வகிபாகத்துக்காகும்.
(4) ஒரு பிரதம நிறைவேற்று அலுவலரின் வகிபாகத்துக்காகும்.

**35.** நிமலன் என்பவர் மரபுரீதியான வடிவங்களுடனான நெடுவாழ்வுத் தன்மை கொண்ட நகைகளைத் தயாரிக்கின்றார். மேலே தரப்பட்ட கூற்றின் மூலம் வரிசையாக எடுத்துக்காட்டப்படுவது, நிமலன் வணிகத்தின்
(1) பலவீனம் மற்றும் பலம் ஆகியவற்றை ஆகும்.
(2) பலம் மற்றும் பலவீனம் ஆகியவற்றை ஆகும்.
(3) வாய்ப்பு மற்றும் பலம் ஆகியவற்றை ஆகும்.
(4) சவால் மற்றும் பலவீனத்தை ஆகும்.

● பின்வரும் சம்பவத்தை வாசித்து **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ரங்கன் என்பவர் எந்தவொரு நோக்கத்தையும் தன்னால் வெற்றிகரமாக அடையமுடியுமென்ற நம்பிக்கையைக் கொண்ட ஓர் இளம் முயற்சியாளர் ஆவார். இவர் தனக்கு வரும் எந்தவொரு பிரச்சினையையும் ஒரு சவாலாக ஏற்று அதற்கு முகம் கொடுக்கின்றார். எனினும், ரங்கன் வித்தியாசமான பல சமூக நம்பிக்கைகள் மற்றும் மனப்பாங்குகளுடன் கடுமையாகப் போராடுகின்றார். இவர் எப்பொழுதும் சந்தை மாற்றங்கள் மற்றும் மக்கட்தொகைச் சூழலின் மாற்றங்களை அறிந்து கொண்டு தனது வணிகத் திட்டத்தைத் தயாரிக்கின்றார்.

**36.** சமூக நம்பிக்கைகள் மற்றும் மனப்பாங்குகளை அறிந்து கொள்வது தொடர்பில் கடுமையாகப் போராடும் ரங்கன்
(1) ஓர் அக முயற்சியாளர் ஆவார்.
(2) ஓர் ஆக்கத்திறனுள்ள முயற்சியாளர் அல்ல.
(3) ஒரு சமூக முயற்சியாளர் ஆவார்.
(4) சந்தை நோக்கிய ஒரு முயற்சியாளர் ஆவார்.

**37.** மக்கட்தொகைச் சூழலைக் கற்பதன் மூலம் இனங்காணக்கூடிய ஒரு காரணி
(1) நுகர்வோர் மனப்பாங்கு ஆகும். (2) வருமான மாற்றங்கள் ஆகும்.
(3) தொழினுட்ப மாற்றங்கள் ஆகும். (4) நுகர்வோர் வயது ஆகும்.

**38.** சந்தைப் பகுப்பாய்வினூடாக இனங்காண **முடியாத** ஒரு காரணி
(1) நுகர்வோர் மனப்பாங்கு ஆகும். (2) நுகர்வோர் வயது ஆகும்.
(3) உற்பத்திப்பொருளொன்றின் அலகுக் கிரயமாகும். (4) இலக்கு நுகர்வோர் ஆவார்.

**39.** திட்டங்கள் எப்பொழுதும்,
(1) எதிர்காலத்துடன் தொடர்புடையவை ஆகும். (2) தற்போதைய நிலைமையை விளக்குபவை ஆகும்.
(3) கடந்த காலத்தைப் பகுப்பாய்வு செய்பவை ஆகும். (4) போட்டிசார் தன்மையை விளக்குபவை ஆகும்.

**40.** சந்தைப் பகுப்பாய்வின் மூலம், வணிகத்தின்
(1) பலங்களை இனங்காண முடியும். (2) பலவீனங்களை இனங்காண முடியும்.
(3) வாய்ப்புகளை இனங்காண முடியும். (4) மூலதனத் தேவைப்பாடுகளை இனங்காண முடியும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

63 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

## முயற்சியாண்மைக் கற்கை II

✳ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைக் கவனமாக வாசித்து (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

திருமதி. மைத்திரேயி என்பவர் மிகவும் சுறுசுறுப்பும் புத்திக்கூர்மையும் ஆக்கத்திறனுமுடைய ஒரு பெண்மணி ஆவார். பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர் சிறந்த குடும்பத்தலைவியாகவும் காணப்படுகின்றார். இவர் தனது பாடசாலைக் காலத்திலிருந்தே பொழுதுபோக்காக செயற்கை நகைகளை உருவாக்குவதில் மிகவும் விருப்பமுடையவராகக் காணப்பட்டார். பல பொருட்காட்சிகளில் பங்குபற்றி அவர் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய வடிவமைப்புகளினாலான நகைகளையும் உருவாக்கினார். இவர் 2017ஆம் ஆண்டில் கைவினைப் பொருட்காட்சியில் பங்குபற்றியதுடன் தான் இதுவரை உருவாக்கிய சகல செயற்கை நகைகளையும் காட்சிப்படுத்தினார். அங்கு அவரது ஆக்கங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களால் பாராட்டப்பட்டதுடன் சில கட்டளைகளையும் பெற்றுக்கொண்டார்.

தனது பொழுதுபோக்கு மற்றும் விருப்பத்தை ஒரு வணிக எண்ணமாக மாற்ற சிந்தித்த அவர், தனது பிள்ளைகளின் கல்விக்குப் பாதகமில்லாத வகையில் இதனை மேற்கொள்வதாக தனது கணவனிடம் எடுத்துக்கூறி இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார். தான் தொடங்க எதிர்பார்க்கும் வணிகத்தை உறுதித்தன்மை கொண்டதாகப் பேணும் நோக்கத்துடன் தனது கணவன் மற்றும் நண்பர் ஒருவருடன் இணைந்து ஒரு தனியார் வரையறுத்த கம்பனியாக ஆரம்பித்து பதிவுசெய்யத் தீர்மானித்தார். உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகள் ஆகிய இரண்டையும் வெற்றிகொள்வதே இவரது இலக்காகும்.

(i) திருமதி. மைத்திரேயி தொடங்குவதற்கு எதிர்பார்த்த வணிகத்தின் வணிக எண்ணத்திற்கான மூலத்தைக் குறிப்பிடுக.

(ii) மேலே தரப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண்கள் முயற்சியாண்மையின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** தடைகளையும் தனித்தனியே தருக.

(iii) திருமதி. மைத்திரேயி ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் நிறுவன வகையின் **நான்கு** அனுகூலங்களை எழுதுக.

(iv) திருமதி. மைத்திரேயியால் அவரது செயற்கை நகைகளை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைக் குறிப்பிடுக.

(v) திருமதி. மைத்திரேயியின் வணிகத்துக்கு நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத ஊக்குவிப்புக்களை வழங்கக்கூடிய **இரண்டு** நிறுவனங்களைத் தனித்தனியே தருக.

● மேற்குறித்த சம்பவத்தில் முன்மொழியப்பட்ட வணிகத்துக்காக எதிர்வரும் ஆண்டுக்கான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

| | ரூ. |
|---|---|
| இயந்திரமும் உபகரணங்களும் | 100 000 |
| பங்கு மூலதனம் | 1 500 000 |
| விற்பனை வாகனம் | 1 000 000 |
| வணிகத்தைப் பதிவுசெய்வதற்கான செலவுகள் | 40 000 |
| வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான செலவுகள் | 20 000 |
| அலுவலக உபகரணங்கள் | 300 000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 400 000 |
| மின்சாரம் | 25 000 |
| ஊழியர் சம்பளங்கள் | 100 000 |
| பேணுதற் செலவுகள் | 40 000 |
| வங்கிக் கடன் | 800 000 |

மேலேயுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

(vi) திருமதி. மைத்திரேயி வணிகத்தின் மொத்தக் காசு உட்பாய்ச்சலைக் கணிப்பிடுக.

(vii) திருமதி. மைத்திரேயி வணிகத்தின் மொத்தக் காசு வெளிப்பாய்ச்சலைக் கணிப்பிடுக.

(viii) உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய **மூன்று** உருப்படிகளைத் தருக.

(ix) வணிகத்தைத் தொடங்குவதற்கு முன்னரான ஆரம்பச் செலவுகள் **இரண்டு** தருக.

(x) ஆண்டின் இறுதியில் உத்தேசிக்கப்பட்டவாறான காசு மீதியைக் கணிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

2. (i) தற்போதைய தலைமுறையானது தமது ஆரோக்கியம் தொடர்பில் மிகவும் அக்கறையுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இது சம்பந்தப்பட்ட வகையில் முயற்சியாளர் ஒருவரால் இனங்காணப்படக் கூடிய **மூன்று** வணிக வாய்ப்புக்களை எழுதுக.
(ii) வணிக நிறுவனமொன்றில் காணக்கூடிய **நான்கு** வகையான முகாமையாளர்களை எழுதுக.
(iii) நிதித் திட்டமொன்றின் மூலம் முயற்சியாளர் ஒருவருக்குக் கிடைக்கும் **நான்கு** அனுகூலங்களை எழுதுக.
(iv) சிற்றளவு வணிகங்களின் தோல்வியில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக.
(v) வணிகம் ஒன்றிற்காக வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ளும்போது வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய **நான்கு** ஆவணங்களை எழுதுக.
(02 × 05 = 10 புள்ளிகள்)

3. (i) சந்தையைப் பகுப்பாய்வு செய்வதற்கு முயற்சியாளர் ஒருவரால் பயன்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைத் தருக.
(ii) சந்தைப்படுத்தற் தந்திரோபாயங்களைத் தீர்மானிக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய பிரதான **நான்கு** மாறிகளைத் தருக.
(iii) இலங்கையிற் காணக்கூடிய இலாப நோக்குடைய மற்றும் இலாப நோக்கமற்ற வணிகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே **இரண்டு** உதாரணங்கள் தருக.
(iv) சுந்தரம் என்பவர் தனது வணிகத்திற்காக பிரதீபன் என்பவரிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தாததனால் பிரதீபன், சுந்தரத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொண்டார். தனியுடைமை வணிகங்களுடன் தொடர்புபடுத்தி மேலே தரப்பட்ட சூழ்நிலையை விளக்குக.
(v) வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றைப் பதிவுசெய்வதற்கு முயற்சியாளர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய **நான்கு** ஆவணங்கள் எவை ?
(02 × 05 = 10 புள்ளிகள்)

4. (i) **மூன்று** வகையான முயற்சியாளர்களைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(ii) தேசிய பொருளாதாரத்துக்கு முயற்சியாளர் ஒருவரால் செய்யப்படும் பங்களிப்புகள் **நான்கு** குறிப்பிடுக.
(iii) முயற்சியாளர்களது ஆக்கத்திறனை வரையறுக்கும் **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.
(iv) முயற்சியாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய **இரண்டு** இணைந்து பணியாற்றும் திறன்கள் மற்றும் **இரண்டு** எண்ணக்கருவாக்கத் திறன்கள் ஆகியவற்றைத் தனித்தனியே தருக.
(v) மனித விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு அண்மையில் முயற்சியாளர்களால் உருவாக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(02 × 05 = 10 புள்ளிகள்)

5. (i) வணிகச் சூழலைக் கற்றுக்கொள்வதன் மூலம் முயற்சியாளர் ஒருவரால் பெற்றுக்கொள்ளக் கூடிய **நான்கு** நன்மைகளைக் குறிப்பிடுக.
(ii) வணிகமொன்றுக்கான ஒழுக்கங்களைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான **மூன்று** தரப்பினரைக் குறிப்பிடுக.
(iii) இலங்கையின் பிரதான வணிகத் துறைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(iv) மனிதவளம் அல்லாத ஏனைய வளங்களைப் பயன்படுத்தி தொடங்கக்கூடிய **நான்கு** வணிக வாய்ப்புகளைக் குறிப்பிடுக.
(v) அக வணிகச் சூழலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் முயற்சியாளர் ஒருவரால் இனங்காணக்கூடிய **இரண்டு** பலவீனங்களைக் குறிப்பிட்டு, அவற்றை வெற்றிகொள்வதற்கான **இரண்டு** வழிகளையும் தருக.
(02 × 05 = 10 புள்ளிகள்)

6. (i) வணிக எண்ண உருவாக்கத்திற்கான மூலங்கள் **நான்கு** தருக.
(ii) வணிகமொன்றின் சமூகப் பொறுப்பு மட்டங்களைப் பெயரிடுக.
(iii) பின்வரும் தரப்பினர்களுக்கு வணிகத் திட்டத்தின் **இரண்டு** அனுகூலங்கள் வீதம் தருக.
(அ) முயற்சியாளர்
(ஆ) நிதி நிறுவனங்கள்
(iv) நிமலன் என்பவர் 200 சட்டைகளுக்கான கட்டளை ஒன்றைப் பெற்றுக்கொண்டார். இக்கட்டளையை நிறைவேற்றுவதால் நிமலுக்கு ஏற்படக்கூடிய **நான்கு** நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுக.
(v) உற்பத்தித் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது முயற்சியாளர் ஒருவரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.
(02 × 05 = 10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

7. ரிஷி என்பவர் தனது பிரதேசத்தில் ஐஸ்கிறீம் தயாரித்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பிக்க தீர்மானித்ததுடன் அதற்கான வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக தகவல்களைத் திரட்டினார்.

தற்போது சந்தையில் ஐஸ்கிறிமுக்கு நிலவும் மாதாந்தக் கேள்வி தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

| ஐஸ்கிறீம் வகை | மாதாந்த கேள்வி (அலகுகள்) | அலகு விலை (ரூ.) |
|---|---|---|
| வெனிலா | 15 000 | 80 |
| சொக்லட் | 14 000 | 90 |
| பழவகை | 10 000 | 60 |

ரிஷி, தற்போதைய கேள்வியின் 10% ஐக் கைப்பற்றத் தீர்மானித்தார்.

வணிகம் தொடர்பிலான மாதாந்த சந்தைப்படுத்தற் செலவுகள் வருமாறு:

| | ரூ. |
|---|---|
| விற்பனையாளனுக்கான சம்பளம் | 12 000 |
| விளம்பரப்படுத்தற் செலவுகள் | 5 000 |
| விற்பனை வாகனத்துக்கான காப்புறுதி | 5 000 |
| எரிபொருள் மற்றும் சேவைச் செலவுகள் | 8 000 |

ரிஷி வணிகத்திற்காக ரூ. 700 000 பெறுமதியான வாகனமொன்றை வாங்க எதிர்பார்த்ததுடன் இதன் வருடாந்த பெறுமானத்தேய்வு 10% ஆகும்.

மேலுள்ள தகவலைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(i) உற்பத்திப் பொருளுக்கான மொத்த வருடாந்தக் கேள்வி (அலகுகள்) (03 புள்ளிகள்)

(ii) வணிகத்தின் எதிர்வுகூறப்பட்ட வருடாந்த விற்பனை (ரூ.) (03 புள்ளிகள்)

(iii) வணிகத்தின் மொத்த வருடாந்த விற்பனைக் கிரயம் (04 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 10)

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka